
இதழ் 19 / அக்டோபர் 2017

# INFORM

சிங்கப்பூரில் உள்ள வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கான மனிதவள அமைச்சின் (MOM) சிறப்பு வெளியீடு

## நீங்கள் உங்களுடைய *ஊதியத்தைக் குறித்த நேரத்தில்* பெற வேண்டியது கட்டாயமாகும்



வெளிநாட்டுப் பணிப்பெண்கள் தங்கள் ஊதியங்களைப் பெறாததால் ஊதியச் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. சில நிகழ்வுகளில், முதலாளி தனது வெளிநாட்டுப் பணிப்பெண்ணின் பல மாத ஊதியங்களைத் தன்னிடமே வைத்துக்கொள்வதன் மூலம் அவருக்கு உதவியுள்ளார், ஆனால் எதிர்பாராத சூழ்நிலைகளின் காரணமாக அவரால் தனது வெளிநாட்டுப் பணிப்பெண்ணுக்கு அவருடைய பல மாத ஊதியங்களை வழங்கமுடியவில்லை.

உங்கள் பணத்தை நீங்களே நிர்வகிப்பதன் மூலமும், உங்களுக்கு ஊதியம் வழங்கப்படாத போது முன்னதாகவே உதவி நாடுவதன் மூலமும் உங்களுக்கு இவ்வாறு நடைபெறுவதை நீங்கள் தடுக்கலாம்.

### சம்பவம் 1

வெளிநாட்டுப் பணிப்பெண்ணான சோய்க்கு (இது அவரது உண்மையான பெயரல்ல) அவரது முதலாளி ஊதியம் வழங்குவதை நிறுத்தி விட்டதால் அவர் வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கான நிலையத்தை (CDE) அணுகினார். சோயைப் பொறுத்த வரை, அவரது முதலாளி அவருக்கு ஜூலை 2015 -இல் இருந்து ஊதியம் அளிக்கவில்லை. அவருக்கு இதுவரையில் S$10,200 ஊதியம் வழங்கப்பட வேண்டியிருந்தது. CDE அவரை மனிதவள அமைச்சிடம் (MOM) பரிந்துரைத்தது. சோயின் முதலாளியை மனிதவள அமைச்சு அணுகிய போது, தனது வர்த்தகம் சரியாக நடைபெறாததால் தன்னால் சோய்க்கு ஊதியம் வழங்க முடியவில்லை என்று அவர் விளக்கினார். எனினும், மனிதவள அமைச்சின் தலையீட்டிற்குப் பிறகு, சோயின் முதலாளி அவருக்குத் தரவேண்டிய ஊதியத்தை முழுவதுமாகத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

### சம்பவம் 2

வெளிநாட்டுப் பணிப்பெண்ணான நோரா (இது அவரது உண்மையான பெயரல்ல) ஜூன் 2013 முதல் அவரது மொத்த மாதாந்தர ஊதியமான S$475 -ஐ அவர் ஒருபோதும் பெறவில்லை. அவருக்கு மாதந்தோறும் S$55 முதல் S$200 வரையிலான ஊதியம் மட்டுமே வழங்கப்பட்டது. அவரது முதலாளி அவருடைய ஊதியத்தைத் தன்னிடமே பிடித்துவைத்துக் கொண்டு, அதை அவரது ஒப்பந்தம் நிறைவடையும் போது மட்டுமே திருப்பித் தருவதாக ஏற்பாடு செய்திருந்தார். நோரா இறுதியாகத் தனது முதலாளியிடம் தனது ஊதியத்தைத் திருப்பித் தருமாறு கேட்ட போது, அவருக்கு அளிக்கப்பட வேண்டிய S$11,016 ஊதியத்தொகை முதலாளியிடம் இல்லை. நோரா மனிதவள அமைச்சிடம் புகார் தெரிவித்தார். மனிதவள அமைச்சின் தலையீட்டிற்குப் பிறகு அவரது முதலாளி S$2,000 -ஐத் திருப்பித் தந்துவிட்டார். எனினும், அவர் நோராவின் ஊதியத்தைத் திருப்பித் தருவதற்குத் தவறியதால், அவரது முதலாளிக்கு நீதிமன்றம் ஐந்து மாதச் சிறைத் தண்டனையை விதித்தது.

## சோய் மற்றும் நோராவைப் போன்ற அதே சூழ்நிலையில் சிக்குவதைத் தவிர்ப்பதற்கு இங்கு சில உதவிக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன.



1. உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஊதியம் வழங்கப்பட வேண்டியது கட்டாயமாகும். உங்களின் கடைசி ஊதியக் காலத்தின் 7 நாட்களுக்குள் உங்கள் முதலாளி உங்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும் (உதாரணமாக, உங்களின் ஊதிய தினம் மே 1ஆம் தேதி என்றால், உங்கள் முதலாளி உங்களுக்கு மே 7ஆம் தேதிக்குள் உங்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும்).
2. உங்கள் முதலாளி உங்களுக்கு எப்போது மற்றும் எவ்வளவு தொகையை அளித்தார் என்பது குறித்த ஒரு பதிவேட்டை நீங்களும் உங்கள் முதலாளியும் வைத்திருக்க வேண்டியது கட்டாயமாகும்.
3. உங்கள் ஊதியம் நேரடியாக ஒரு வங்கிக் கணக்கில் செலுத்தப்படுவதற்கு நீங்கள் விரும்பினால், அவ்வாறு செய்வதற்கு உங்கள் முதலாளியை நீங்கள் கேட்டுக்கொள்ளலாம். அவர் அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.
4. உங்கள் முதலாளி தொடர்ந்து உங்களுக்குத் தாமதமாக ஊதியம் வழங்கினால், நீங்கள் செய்ய வேண்டியது:
   - உங்களின் வேலைவாய்ப்பு நிறுவனத்திடம் தெரிவிக்க வேண்டும்; அல்லது
   - மனிதவள அமைச்சின் வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கான உதவியழைப்பை (1800-339 5505) அழைத்து, அச்சம்பவம் குறித்து மனிதவள அமைச்சிடம் புகார் தெரிவிக்க வேண்டும்.
5. உங்கள் ஊதியத்தை வைத்துக்கொள்ளுமாறு உங்கள் முதலாளியை நீங்கள் கேட்டுக்கொள்ளக் கூடாது.
6. உங்கள் முதலாளி உங்களுக்கு ஊதியம் வழங்க மறந்துவிட்டால் அல்லது வழங்கவில்லை என்றால், உங்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்று அவரிடம் பணிவன்புடன் கூறுங்கள்.



### முன்னதாகவே உதவியை நாடுங்கள்

உங்களுக்கு ஊதியம் வழங்கப்படாத போது முன்னதாகவே உதவியை நாடுங்கள். நீங்கள் தாமதித்தால், உங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்தொகை அதிகரிக்கும், மேலும் உங்கள் முதலாளியின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் கூட, உங்களுக்கு வழங்குவதற்கு அவரிடம் பணம் இல்லாமல் போகலாம்.

# ஒரு அந்நியரைக் குடும்பத்திற்குள் அனுமதித்தல்



இந்திராவின் திறமைகளும் சமையல் திறனும் எங்கள் குடும்பத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகும். எங்களால் இயன்ற அளவிற்கு நாங்கள் இந்திராவின் பணிநீட்டிப்புக்காக உறுதியாகக் கோரிக்கை வைப்போம்.
**- திருவாட்டி வீரா**

**பஸ்கோடேயாயே கேதார இந்திராணி ஃபெர்னாண்டோ (இந்திரா)** அவர்கள் இலங்கையில் இருந்து வந்திருக்கும் ஒரு வெளிநாட்டுப் பணிப்பெண்ணாகும். இவர் சமூக ஆதரவு மற்றும் பயிற்சிக்கான வெளிநாட்டுப் பணிப்பெண் சங்கத்தால் (FAST) ஏற்பாடு செய்யப்பட்ட, 2016ம் ஆண்டின் சிறந்த வெளிநாட்டுப் பணிப்பெண் (FDW) என்ற விருதைப் பெற்றவர்.

இந்திரா அவர்கள் இருபதாண்டுகளுக்கும் மேலாக இங்கு வேலை செய்த பிறகு, அவர் சிங்கப்பூரர்களின் வாழ்க்கை முறைக்குத் தன்னை மிக நன்றாகப் பழக்கப்படுத்திக்கொண்டுள்ளார். இன்று, இவர் தனது முதலாளியான திருவாட்டி வீரா விஜய பாலகிருஷ்ணன் அவர்களுடனும், அவரது குடும்பத்தாருடனும் ஒரு நல்ல உறவுமுறையை மகிழ்ச்சியுடன் பேணுகிறார். அக்குடும்பத்திற்குப் பணிப்பெண் என்பதைக் காட்டிலும் மிக நெருக்கமாக இருக்கிறார்.

இந்திரா அவர்கள் 1994ம் ஆண்டில் தனது சொந்த ஊரை விட்டுச் சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தார். இவர் திருவாட்டி வீரா மற்றும் அவரது குடும்பத்திற்காக வேலை செய்யத் தொடங்கிய போது இவருக்கு சிரமமாக இருந்தது. இவரால் ஆங்கிலம் பேச முடியவில்லை. அதனால், பேச்சுத் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்பட்டன. ஒரு நகரத்தில் வாழ்வதற்கும் வேலை செய்வதற்கும் பழக்கப்படுத்திக் கொள்வது ஒரு சவாலான விஷயம் என்பதையும் இந்திரா அறிந்துகொண்டார்.

எனினும், தன்னால் இயன்ற அளவிற்கு விரைவாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்திரா உறுதி ஏற்றார். திருவாட்டி வீரா அவர்களின் வழிகாட்டுதலுடன் அவர் கடுமையாக உழைத்தார், புதிய மற்றும் பயனுள்ள திறன்களை மட்டுமின்றி ஆங்கிலத்தையும் கூட கற்றுக்கொண்டார். இன்று, இவரால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியும். மேலும், இவரால் குடும்பத்திற்குச் சீன, பெரானக்கன் மற்றும் இந்திய வகை உணவுகளையும் கூட சமைக்க முடியும்.

இந்திரா அவர்கள் திருவாட்டி வீரா அவர்களின் மூன்று மகன்களைப் பராமரித்து வருகிறார். அவர்கள் மீது அளவுகடந்த அன்பைப் பொழிகிறார். 2014ம் ஆண்டில், இவர் திருவாட்டி வீரா அவர்களின் உடல்நலம் பாதித்த மாமனார்-மாமியாருக்குப் பராமரிப்பு வழங்குவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இந்திரா அவர்களை அடிக்கடி பேருந்துச் சவாரிகளுக்கும், மருத்துவச் சந்திப்புத் திட்டங்களுக்கும் அழைத்துச் செல்வார். திருவாட்டி வீரா அவர்கள் இந்திராவைப் பெரிதும் புகழ்ந்தார். **“இந்திரா அவர்கள் கடந்த 22 ஆண்டுகளாக எங்கள் குடும்பத்திற்கு ஒரு வழக்கமான உதவியாளரில் இருந்து ஒரு அனுபவம் வாய்ந்த செவிலித்தாயாகவும், சமையல் மற்றும் பணிப்பெண்ணாகவும் உருமாறியுள்ளார்.”** என்று திருவாட்டி வீரா பாராட்டினார்.

**“அவரது திறமைகளும் சமையல் திறனும் எங்கள் குடும்பத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகும். எங்களால் இயன்ற அளவிற்கு நாங்கள் இந்திராவின் பணிநீட்டிப்புக்காக உறுதியாகக் கோரிக்கை வைப்போம்.”** என்று திருவாட்டி வீரா அவர்கள் மேலும் கூறினார்.

சிங்கப்பூரில் உள்ள வாழ்க்கைக்குத் தங்களைப் பழக்கிக்கொள்ள இன்னமும் முயற்சி செய்துகொண்டிருக்கும் எல்லா வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கும் இந்திராவின் கதை ஊக்கமளிக்கும் என்று இன்ஃபார்ம் குழு நம்புகிறது. உங்களின் வேலை அனுபவத்தை உங்களால் இங்கு மகிழ்ச்சியானதாகவும், மனநிறைவை வழங்குவதாகவும் உருவாக்கிக்கொள்ள முடியும்.

## ஒரே ஒரு தொலைப்பேசி அழைப்பில் உதவி பெறலாம்

**6509 1535 என்ற எண்ணில் FAST -ஐ அழையுங்கள்**

### FAST’இன் நட்புச் சேவை

அவ்வப்போது, தங்களைச் சரிசெய்துகொள்ளுதல், உறவுமுறை அல்லது நிதி சார்ந்த பிரச்சினைகளில் உதவி தேவைப்படுகின்ற வெளிநாட்டுப் பணிப்பெண்கள் குறித்த விவரங்களைச் சமூக ஆதரவு மற்றும் பயிற்சிக்கான வெளிநாட்டுப் பணிப்பெண் சங்கம் (FAST) அறிந்துகொள்கிறது. 2013ம் ஆண்டில், தனிமையில் வாடுகின்ற மற்றும் மன உளைச்சலைக் கொண்டிருக்கின்ற வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கு உதவுவதற்கு நட்புச் சேவை மற்றும் மனிதநேய உதவியை FAST தொடங்கியது. அவர்கள் சமூகத்தில் ஒன்றிணைந்து, பயிலரங்குகள், குழு உருவாக்கம் மற்றும் கற்றல் நிகழ்வுகள் போன்ற குழு நடவடிக்கைகளின் வாயிலாக நண்பர்களை உருவாக்கிக்கொள்வதற்கான ஒரு தளத்தை அவை வழங்குகின்றன.

இன்றைய தேவை வரையில், சுமார் 1,000 வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கு FAST உதவியுள்ளது. மேலும், இந்த வெளிநாட்டுப் பணிப்பெண்களில் பலர் தங்களின் சக வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கு வழிகாட்டியாளர்களாக மாறியுள்ளனர்.

நீங்கள் சிங்கப்பூரில் உள்ள ஒரு புதிய வெளிநாட்டுப் பணிப்பெண் என்றால் மற்றும் சிங்கப்பூரில் வேலை செய்வதற்குத் தன்னைச் சரிசெய்துகொள்ள உதவி தேவைப்படுவர் என்றால், நட்புச் சேவையின் ஒரு அங்கமாக இருப்பதற்குப் பதிவுசெய்துகொள்ள நீங்கள் 6509 1535 என்ற எண்ணில் FAST -ஐத் தொடர்புகொள்ளலாம்.

### FAST’இன் இலவச சமரசச் சேவை

ஜூன் 2016ல் இருந்து, வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கும் அவர்களின் முதலாளிகளுக்கும் இடையே உள்ள பிரச்சினைகளையும் சர்ச்சைகளையும் தீர்த்துவைப்பதற்கு, இலவச சமரசச் சேவைகளை FAST வழங்கு வருகிறது. FAST’இன் கிளப்ஹவுஸில் சமசர அமர்வுகளை நடத்துவதற்கு சமூக சமரச நிலையத்தில் இருக்கும் ஏழு அனுபவம் வாய்ந்த நடுவர்கள் உதவுகின்றனர்.

உங்கள் முதலாளி அல்லது உங்கள் வேலைவாய்ப்பு நிறுவனத்துடன் உங்களால் ஏதேனும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை எனில், உதவிக்கு FAST-ஐ அழைக்கவும். யாரேனும் நடுவர்களுடன் ஒரு சந்திப்புத் திட்டத்தை முன்பதிவு செய்துகொள்வதற்கு, 6509 1535 என்ற எண்ணை அழையுங்கள்.




# உங்களுக்குத் தெரியுமா?

உங்களின் வேலை அனுமதிச்சீட்டு 1 ஜனவரி 2013 -க்குப் பிறகு வழங்கப்பட்டிருந்தால் அல்லது புதுப்பிக்கப்பட்டிருந்தால், நீங்கள் வாரம் ஒரு ஓய்வு தினத்தைப் பெறுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. நீங்கள் பணியில் இருந்து உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் இடைஓய்வு பெறுவதற்கு இந்த ஓய்வு தினம் உங்களுக்கு வழங்கப்படும். நன்றாக ஓய்வு எடுப்பது மற்றும் புத்துணர்வு பெறுவதும் கூட நீங்கள் சிறப்பாகக் கவனம் செலுத்துவதற்கு உங்களைத் தயார்படுத்துகிறது மற்றும் பணிக்குத் திரும்பும் போது நீங்கள் மேலும் ஆக்கத் திறன் மிக்க உதவியாளராக விளங்கலாம். உங்களுக்கு ஓய்வு தினம் வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அதற்காக வேண்டுகோள் விடுப்பதற்கு உங்களின் வேலைவாய்ப்பு நிறுவனத்தை அல்லது முதலாளியை அணுகுங்கள்.

எனினும், ஓய்வு தினத்தின் போது உங்கள் முதலாளிக்கு உங்கள் உதவி தேவைப்பட்டால் மற்றும் அதற்கு நீங்கள் ஒப்புக்கொண்டால்,



**நீங்கள் வேலை செய்யும் ஒவ்வொரு ஓய்வு தினத்திற்காகவும் உங்கள் முதலாளி உங்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு நாள் ஊதியத்தை வழங்க வேண்டும், அல்லது**



**உங்கள் முதலாளி உங்களுக்கு அதே மாதத்திற்குள் ஒரு மாற்று ஓய்வு தினத்தை உங்களுக்கு வழங்கலாம்.**

உங்களின் ஓய்வு தினத்தின் போது, நீங்கள் கல்வி சார்ந்த பயிற்சி வகுப்புகள் மற்றும் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான பயிற்சி போன்ற ஆக்கப்பூர்வமான மற்றும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளில் பங்கேற்கலாம்.

**இடை ஓய்வு எடுப்பதற்கும் புத்துணர்ச்சி பெறுவதற்கும் நினைவில் கொள்ளுங்கள்! ஒரு மகிழ்ச்சியான, ஆரோக்கியமான மற்றும் ஆக்கப்பூர்வமான வெளிநாட்டுப் பணிப்பெண்ணாக விளங்குங்கள்!**



ஐதாவில் (Aidhaa) வழங்கப்படும் பயிற்சி வகுப்புகள் குறித்த மேலும் தகவல்களுக்கு, அவர்களின் www.aidha.org என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது +65 97894041 / +65 63415287 ஆகிய எண்களில் அவர்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

# கனவை நனவாக்குதல்

2007ம் ஆண்டில், மரிலின் அவர்கள் பிலிப்பைன்ஸில் உள்ள தனது சொந்த ஊரான மாஸின் சிட்டியை விட்டு ஆர்சர்ட் குடும்பத்திற்காகப் வேலை செய்வதற்காக பரபரப்பான நகரமான ஹாங்காங்கிற்கு வந்து சேர்ந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவர்களின் குடும்பம் சிங்கப்பூருக்குக் குடியேறிய போது, அவர்கள் மரிலினையும் தங்களுடன் அழைத்து வந்தனர். ஆர்ச்சர்ட் குடும்பம் எப்பொழுதும் அவரைத் தங்கள் குடும்பத்தில் ஒருவராக நடத்தியதால், புதிய சூழ்நிலைக்கு மாறுவது மரிலினுக்குச் சுலபமாக இருந்தது.

அவர்களின் ஊக்குவிப்புக் காரணமாக மரிலின் ஐதாவில் உள்ள பயிற்சி வகுப்புகளுக்குப் பதிவுசெய்துகொண்டார். அங்கு வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கான நிதி சார்ந்த கல்வியறிவு மற்றும் சுய-மேம்பாட்டுத் திறன்கள் போன்ற பயிற்சித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.



ஐதாவில், மரிலின் அவர்களுடைய திறன்களை வெளிப்படுவதற்கு வழிகாட்டி ஊக்குவித்த வழிகாட்டுநர்களையும் அவர் கண்டறிந்தார். ஹையான் புயலால் அவரது சொந்த மாநிலத்தில் துப்புரவும் நீர்ச் சேவைகளும் பாதிக்கப்பட்ட போது, அவரது சகோதரியும் பெற்றோர்களும் மாசடைந்த தண்ணீரை அருந்தியதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் செய்வதறியாது திகைத்தார். இது அவரது சொந்த நாட்டில் உள்ள சூழலை மேம்படுத்த வேண்டும் என்ற ஆவலை அவருக்கு ஏற்படுத்தியது. “ஒரு நாள், எனது சமூகத்திற்கு நான் நல்ல குடிநீரை வழங்குவேன்” என்று அவர் மனதிற்குள் நினைத்துக்கொண்டார். அது ஒரு சவாலாகத் தோன்றியது, ஆனால் அவர் ஐதாவில் கற்றுக்கொண்ட அனைத்தையும் நல்ல நோக்கத்திற்காகப் பயன்படுத்துவது என முடிவுசெய்தார்.

நகராட்சி நீர் மாநிலம் மற்றும் கிராமத் தலைவருடன் பல மாதக் கடுமையான உழைப்புக்குப் பிறகு, 28 செப்டம்பர் 2016 அன்று நீர் நிலையம் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்பட்டது. இது ஒரு தனிப்பட்ட சாதனை என்றபோதிலும், இது சமூகத்திற்கான மிகவும் மதிப்புவாய்ந்த சேவைகளில் ஒன்றாகவும் உள்ளது.

மரிலின் அவர்கள் ஐதாவில் பெற்ற அனைத்து அறிவு மற்றும் திறன்களுக்காக மிகவும் நன்றி கூறுகிறார். **“நான் நிறைவுசெய்துள்ள அனைத்தையும் நினைக்கும் போது, அது நான் உயிருடன் இருப்பதாக என்னை உணரச் செய்கிறது.”** என்று மரிலின் கூறினார். அவர் அடுத்த ஆண்டு தனது தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்லும் போது பெருமிதத்துடன் தலைநிமிந்து செல்வார்.

# சரியான வழியில் உதவியை நாடுதல்

### நினைவில் கொள்ளுங்கள்:

எந்தச் சூழ்நிலையிலும் உங்கள் உயிருக்கு ஆபத்தை ஏற்படும் வகையில் வேலை செய்யாதீர்கள் அல்லது உங்களின் முதலாளி அல்லது குடும்ப உறுப்பினர்கள் செய்யாத எந்த விஷயத்தைப் பற்றியும் புகார் கூறாதீர்கள்.

உங்கள் முதலாளி உங்களைத் துன்புறுத்தினாலொழிய அல்லது தீவிபத்து போன்ற அவசர நிகழ்வுகள் நிகழ்ந்தாலொழிய, அவரிடம் சொல்லாமல் அவரது வீட்டில் இருந்து வெளியேறாதீர்கள். அவ்வாறு செய்வதால் உங்கள் பிரச்சினை தீராது. மேலும், நீங்கள் சிங்கப்பூரில் மீண்டும் வேலைசெய்ய முடியாமல் போகலாம்.

அதற்குப் பதிலாக, சரியான வழியில் உதவியை நாடுவதற்கு வலதுபக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.



சிங்கப்பூரில் உங்களுடைய வேலைவாய்ப்பின் போது, உங்களால் அதிகம் கற்றுக்கொள்ள முடியும் என்பதால் நீங்கள் மகிழ்ச்சியில் திளைக்கக்கூடும். நீங்கள் செய்ய வேண்டிய வீட்டு வேலைகள் உங்களுக்குப் புதியதாக இருக்கலாம். மேலும், நீங்கள் மனஉளைச்சலாக உணரக்கூடும் அல்லது நீங்கள் வீட்டு ஞாபகத்தால் ஏங்கலாம்.

### அப்படியென்றால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

- உங்கள் முதலாளியிடம் பேசுங்கள், இதன்மூலம் நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை அவர்கள் அறிந்துகொண்டு, உங்களுக்கு உதவலாம்.
- நீங்களும் உங்கள் முதலாளியும் சேர்ந்து ஒரு தீர்வைக் கண்டறிய முடியவில்லை எனில், உதவிக்கு உங்களின் அசல் EA, CDE அல்லது MOM -ஐத் தொடர்புகொள்ளவும்.

### ஒரு அவசரகாலம் ஏற்பட்டால் மற்றும் உதவியை நாடுவதற்காக உங்கள் முதலாளியின் வீட்டிலிருந்து நீங்கள் வெளியேற வேண்டிய தேவை ஏற்பட்டால், நீங்கள் பொறுப்புணர்வுடன் உதவியை நாட வேண்டும்;

- உங்கள் முதலாளியின் குழந்தைகள் அல்லது வயது முதிர்ந்த பெற்றோர்களைக் கவனிப்பாரின்றி விட்டுச் செல்லக்கூடாது, அல்லது வீட்டின் மின்சாரச் சாதனங்களை (எ.கா., அடுப்பு, இஸ்திரிப்பெட்டி) இயங்கும் நிலையில் விட்டுச் செல்லக்கூடாது.
- நீங்கள் வீட்டை விட்டு வெளியேறியதும், உடனடியாக அல்லது அடுத்த வேலை நாளுக்குள் MOM-யிடம் தெரிவிக்கவும், இதன்மூலம் உங்கள் பிரச்சினையை எங்களால் விரைவாகத் தீர்க்க உதவ முடியும். தேவைப்பட்டால், நீங்கள் தங்குவதற்கான ஒரு இடத்தை நீங்கள் கண்டறிவதற்கு MOM உதவும்.
- நீங்கள் அவ்வாறு செய்யவில்லை என்றால், நீங்கள் உங்களுடைய வேலை அனுமதிச்சீட்டின் நிபந்தனைகளை மீறியதாகக் கருதப்பட்டு, தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுவீர்கள். நீங்கள் **சிங்கப்பூரில் வேலை செய்வதற்கு உங்களால் திரும்பிவர** முடியாமல் போகலாம். .
- உங்களால் உங்கள் முதலாளியின் வீட்டிலிருந்து வெளியேற இயலவில்லை எனில், உதவிக்கு MOM அல்லது CDE -ஐ அழைக்கவும்.

**MOM'இன் நேரடித் தொலைபேசி எண்:** 1800 339 5505
**CDE:** 1800 2255 233 (24 மணிநேர நேரடித் தொலைபேசி எண்)

# "உங்களை அறிதல், என்னை அறிதல்"



### வெளிநாட்டுப் பணிப்பெண் மற்றும் முதலாளிக்கு இடையில் உள்ள வேலைவாய்ப்பு தொடர்பான இடைவெளிகளை நிரப்புதல்

உதவி தேவைப்படும் வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கான சேவைகளை வழங்குவதற்கு 24 ஜனவரி 2016 அன்று இல்லப் பணியாளர்களுக்கான நிலையம் (CDE) தொடங்கப்பட்டது. வேலைவாய்ப்பு நிறுவனங்கள், ஆணையங்கள் மற்றும் ஒத்த மனதுடைய மற்ற அமைப்புகள் போன்ற பல்வேறு பங்குதாரர்களுடன் நெருக்கமாகப் பணிபுரிவதன் மூலம், வேலைவாய்ப்பு தொடர்பான பிரச்சினைகளின் மீது வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கும் அவர்களின் முதலாளிகளுக்கும் அடிப்படை நேருக்கு நேர் கலந்தாய்வு மற்றும் சமரச் சேவைகள் போன்ற சேவைகளை CDE வழங்குகிறது.

வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கும் அவர்களது முதலாளிகளுக்கும் இடையே பரஸ்பர புரிதலையும் மரியாதையையும் வளர்ப்பதற்கு, ஆண்டுக்கு மூன்று முறை வெளிப்படும் கையடக்க வழிகாட்டிகள் தொடர் ஒன்றை CDE தயாரிக்கும். இதன் முதல் வழிகாட்டி ஜனவரி 2017ல் தொடங்கப்பட்டது. அது பொதுவான தவறான கருத்துக்கள் மற்றும் கலாசார வேறுபாடுகள் மீதும், வெளிநாட்டுப் பணிப்பெண்கள் தங்கள் முதலாளிகளுடன் சிறப்பாகத் தகவல்தொடர்புகொள்ள உதவுவதற்கு, மொழிபெயர்ப்புகளுடனான பொதுவான ஆங்கில வார்த்தைகள் மீதும் கவனம் செலுத்தியது. முதலாளிகளும் வெளிநாட்டுப் பணிப்பெண்களும் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கக்கூடிய எதிர்பார்ப்புகளைக் கையாள இந்த வழிகாட்டிகளின் தொடர் உதவும். இது குறிப்பாக வேலைவாய்ப்பின் தொடக்கக் கட்டங்களில் உதவும். இதன்மூலம், இது ஆரோக்கியமான முதலாளி-பணியாளர் உறவுமுறைகளை ஊக்குவித்து வளர்க்கும்.

சட்டைப்பையில் வைக்கக்கூடிய அளவுள்ள இந்த வழிகாட்டிகள் நான்கு இருமொழிப் பதிப்புகளில் கிடைக்கின்றன. அவையாவன: ஆங்கிலம்-பஹாஸா இந்தோனேசியா, ஆங்கிலம்-பர்மீஸ், ஆங்கிலம்-ட␣கலா␣க் மற்றும் ஆங்கிலம்-தமிழ். வெளிநாட்டுப் பணிப்பெண்கள் இந்த வழிகாட்டிகளின் நகலை CED'இன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது http://cde.org.sg/wps/portal/cde/home/learn/selfimprovement. என்ற எங்கள் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

CDE அல்லது அவர்களின் ஏதேனும் முயற்சிகள் குறித்த மேலும் தகவல்களுக்கு, **www.cde.org.sg** என்ற இணையத்தளத்தை அல்லது **http://www.facebook.com/cde.singapore** -இல் உள்ள CDE'இன் முகநூலில் பார்வையிடவும்.

உதவிக்கு, நீங்கள் CDE'இன் 24-மணிநேரக் கட்டணமில்லா நேரடித் தொலைபேசி எண் 1800 2255 233 -ஐ அழைக்கலாம் அல்லது அவர்களை 185A தாம்சன் ரோடு, கோல்டுஹில் சென்டர் (லெவல் 2) -இல் அவர்களைப் பார்வையிடலாம்.

# பயனுள்ள தொடர்பு விவரங்கள்

உதவி அல்லது அவசரகாலங்களுக்காகப் பின்வரும் எண்களைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்

### MOM வெளிநாட்டுப் பணிப்பெண் (FDW) உதவியழைப்பு எண்

MINISTRY OF MANPOWER 1800 339 5505

இந்த நேரடித் தொலைபேசி எண்ணானது, நலவாழ்வு, ஊதியம் மற்றும் பிற வேலைவாய்ப்பு தொடர்பான விவகாரங்கள் தொடர்பாக உதவி மற்றும் ஆலோசனையை நாடுகின்ற வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்கானதாகும்.

### பிற அவசரகாலங்கள்

| | |
|---|---|
| ஆம்புலன்ஸ்/தீ | 995 |
| காவல்துறை | 999 |

### பிற உதவியழைப்பு எண்கள்

**இல்லப் பணியாளர்களுக்கான மையம்**
1800 CALL CDE
1800 2255 233 (24 மணிநேரம்)

**சிங்கப்பூர் அபய ஆலோசனைச் சங்கம் (SOS)**
1800 221 4444 (24 மணிநேரம்)

**வேலைவாய்ப்பு நிறுவனங்களின் சங்கம் (சிங்கப்பூர்)**
6836 2618

**ACMI நேரடித் தொலைபேசி எண்**
6801 7400

**சமூக ஆதரவு மற்றும் பயிற்சிக்கான வெளிநாட்டுப் பணிப்பெண்கள் சங்கம் (FAST)**
கட்டணமில்லா நேரடித் தொலைபேசி எண்
1800 339 4357 (24 மணிநேரம்)

### அரசுத் தூதரகங்கள் மற்றும் உயர் ஆணையங்கள்

| நாடு | எண் |
|---|---|
| வங்கதேசம் | 6255 1579 |
| பிலிப்பைன்ஸ் | 6737 3977 |
| இந்தியா | 6737 6777 |
| தாய்லாந்து | 6737 2475 / 8421 0105 |
| இந்தோனேசியா | 6737 7422 / 9295 3964 |
| கம்போடியா | 6341 9785 |
| மியான்மர் | 6735 1672 |
| இலங்கை | 6254 4595 |